# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
# ஆத்தூர்
------
## அசல் வழக்கு எண்.60/2021

**2025 ஆம்** வருடம் நவம்பர் மாதம் 21 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுப்பிரமணி | ஜாதி | : | |
| த.பெ | : | சடையாண்டி | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | அய்யம்பாளையம் | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 65/2025 |
| தேதி | : | 21.11.2025 | | | |

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு **விசாரணை**

இந்த தாவா வழக்கின் தொடர்புடைய வழக்கு இந்நீதிமன்றத்தில் தீர்ப்பாகியுள்ள அசல் வழக்கு எண்.61/2021 என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.61/2021 முழு விசாரணைக்கு பிறகு 21.04.2024 அன்று தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.61/2021 ல் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேல்முறையீடு எதுவும் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. அசல் வழக்கு எண்.61/2021 ல் அந்த வழக்கில் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.61/2021 ன் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து அரசு தரப்பில் மேல்முறையீடு செய்துள்ளார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

தாவா சொத்து உங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்ற அடிப்படையில் பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கில் நிரந்த உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.61/2021 ல் இந்த தாவா சொத்தானது உங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் இல்லை என்று தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.61/2021 மற்றும் இந்த வழக்கான அசல் வழக்கு எண்.60/2021 லும் சம்மந்தப்பட்ட சொத்துக்கள் மற்றும் வாதிகள் ஒரே மாதிரியானவை என்றால் சரிதான்.

இந்த வழக்கிலும், அசல் வழக்கு எண்.61/2021 வழக்கிலும் இரண்டாவது வாதி உங்களுடைய மனைவி தான் என்றால் சரிதான். இரண்டாம் வாதியான உங்கள் மனைவி தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்ததன் மூலம் வரையறை செய்யப்பட்ட

கொடுக்கப்பட்ட பட்டாவின் மூலம் இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்த உறுத்துக்கட்டளை கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.61/2021 லும் மற்றும் இந்த வழக்கிலும் தாவா சொத்து உங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று ஒரு கட்சியும், தாவா சொத்து உங்கள் மனைவிக்கு பட்டாவின் மூலம் பாத்தியப்பட்டது என்று மற்றொரு கட்சியும் என்ற இரண்டு நிலைப்பாட்டை எடுத்துள்ளீர்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கு உங்கள் மனைவி பெயரில் கொடுத்த பட்டா வருவாய் கோட்டாச்சியர், திண்டுக்கல் அவர்களால் ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான்.

உங்களிடம் காட்டப்படும் ஆவணம் தான் உங்கள் மனைவிக்கு தாவா சொத்தை பொறுத்து வழங்கப்பட்ட பட்டாவை திண்டுக்கல் வருவாய் கோட்டாச்சியர் ரத்து செய்ததற்கான ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணம் **(பி.வா.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அய்யம்பாளையம் கிராமம் சர்வே எண். 1006/982, சர்வே எண். 1006/983, சர்வே எண். 1006/980 ஆகிய சர்வே எண்களில் உங்களுக்கு சொந்தமாக வீடு உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 ஆவணமான வீட்டு வரி ரசீதுகள் தாவா சொத்திற்கு சம்மந்தம் இல்லை என்றும், மேற்சொன்ன அய்யம்பாளையத்தில் உள்ள உங்கள் வீட்டிற்கு தொடர்பான வரி ரசீதுகள் என்றால் சரியல்ல.

இன்றைய தேதியில் தாவா சொத்திற்கான அ பதிவேடு, சிட்டா அடங்கல் ஆகியவற்றில் தாவா சொத்தின் வகைப்பாடு அரசு புறம்போக்கு நிலம் என்று தான் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் பிரதிவாதிகளுக்கும், தாவா சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதிகள் உங்களை நேரடியாகவோ அல்லது உடல்ரீதியாக வன்முறையை ஏற்படுத்தும் விதத்திலோ தொந்தரவு செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் அரசு அதிகாரிகள் மூலம் என்னை தொந்தரவு செய்தார்கள். பிரதிவாதிகள் அரசு அதிகாரிகள் மூலம் உங்களை தொந்தரவு செய்கிறார்கள் என்று கூறுவது தவறு என்றும், சட்டப்படியான நடவடிக்கையை தான் அவர்கள் எடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

அசல் வழக்கு எண்.61/2021 மற்றும் இந்த வழக்கின் வழக்கு மூலமும் 06.09.2014 என்று தான் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கானது 09.09.2014 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் நீங்கள் வருவாய்துறையினரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.61/2021 வழக்கானது 18.12.2015 அன்று நீதிமன்றத்தில்

தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் முதல் பிரதிவாதி பாலகிருஷ்ணன் 21.12.2020 அன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் இறந்த பிறகு 2 முதல் 6 பிரதிவாதிகளை தரப்பினர்களாக சேர்க்பதற்கு 18.07.2022 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

இந்த வழக்கில் 6 ஆம் பிரதிவாதியானவர் அசல் வழக்கு எண்.61/2021 வழக்கில் தன்னை தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்து அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், அந்த மனுவின் மீது சென்ற சீராய்வு மனுவும் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த இரண்டு மனுக்களும் 6 ஆம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் கிடையாது என்று கூறி நீங்கள் தாக்கல் செய்த இடைக்கால மனுவின் எதிருரைகளின் அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள வேப்ப மரத்தை நீங்கள் வெட்டியதால் உங்களுக்கு திண்டுக்கல் வருவாய் கோட்டாச்சியர் அவர்கள் ரூ.4060/- அபராதம் விதித்து அந்த அபராத தொகையை நீங்கள் கட்டியுள்ளீர்கள் என்றால் சரிதான். தாவா வழக்கு தாக்கல் செய்வதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பெரியகுளம் தாலுகாவில் உள்ள குள்ளபுரத்தில் நீங்கள் குடும்பத்துடன் வசித்து வந்தீர்கள் என்றால் சரிதான்.

அசல் வழக்கு எண்.61/2021 ல் வருவாய்துறையினர் உங்களுக்கு எதிராக எந்த சாட்சியமும், ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு உங்களுக்கு Balance of conveniance இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து வருவாய் கோட்டாச்சியர் அவர்கள் உங்கள் மனைவி பெயரில் இருந்த பட்டாவை ரத்து செய்வதை தடுக்கும் நோக்கில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு பொய்யான தகவலின் அடிப்படையில் பிரதிவாதிகளுக்கு இடையூறு செய்ய வேண்டும் என்பதற்காக உங்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே, இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor